

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கழக மாநில மாணவர் அணிச் செயலாளர் திருமதி வீரமணி, துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.3.2026), மே 17 இயக்கத்தினர் இரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்து போராட்டம் நடத்தியபோது இரயில் விபத்தில் சிக்கி சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மே–17 இயக்கத்தைச் சார்ந்த சிவக்குமார் (எ) சிவா திலீபன் அவர்களின் உடல்நலம் குறித்து அவரது குடும்பத்தினரிடம் விசாரித்து, அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, ஆகியோர் உடனிருந்தனர்.

### பத்திரிகையாளர் சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று

# மருத்துவக் காப்பீடு, வீட்டுமனை - ஓய்வூதிய உயர்வு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!



**சென்னை, மார்ச் 15-**

**சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.3.2026) பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் முதலமைச்சர் அவர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தில் உயர்வு, மருத்துவக் காப்பீடு மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடம் முன்வைத்தனர்.**

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்கும் வகையில் பத்திரிகையாளர்கள் தற்போது பெற்றுவரும் ஓய்வூதியம் மாதம் 12,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்.

அதேபோல, அங்கீகார அடையாள அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவக் காப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை பத்திரிகையாளர்கள் குடியிருக்க வீடு அல்லது வீடு கட்ட நிலம் ஒதுக்கித் தரவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டு மனைகள் வழங்க ஏற்பாடு செய்யவும், இதற்கு பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்.

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் ஏனைய கோரிக்கைகள் குறித்து விரைவில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### தாய்த் தமிழைக் காக்க எந்தத் தியாகத்துக்கும் ஆயத்தமாக இருக்கும்

# இளைஞர்களே.... உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல!

## இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின் போது ரெயில் முன் பாய்ந்து பலத்த காயங்களுடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிவா திலீபனை சந்தித்தபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப்பதிவில் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 15-

அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மே17 இயக்கத்தைச் சார்ந்த சிவா திலீபன் அவர்களை சந்தித்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**தாய்த்தமிழைக் காக்க எந்தத் தியாகத்துக்கும் ஆயத்தமாக இருக்கும் இளைஞர்களே.... உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல!**

**இந்தித் திணிப்புக்கு எதிராக மே 17 இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தில், யாரும் எதிர்பாராத நிலையில் உணர்ச்சிப் பெருக்கால் ரயில் முன் பாய்ந்து, பலத்த காயங்களுடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சகோதரர் சிவா திலீபன் அவர்களையும், உடனிருக்கும் மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தி அவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினேன்.**

**அப்போது, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் சகோதரர் சிவா திலீபன் நலம் பெற வேண்டும் என்ற எண்ணமும், "பிள்ளைகளைப் பலிகொடுக்கவா இயக்கம் நடத்துகிறோம்" என்று மொழிப்போரின்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதும் ஒரு சேர என்னுள் எழுந்தது.**

**இருந்து போராட வேண்டும்; அதன் பயனை நாம் இருந்து காண வேண்டும்!**

**தமிழ்நாட்டைச் சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அரசியல் களத்தில் ஒற்றுமையுடன் முறியடிப்போம். உணர்ச்சிகள் நம் அறிவாற்றலை ஆட்கொள்ள விடாமல், சிந்தித்துச் செயல்படுவோம்!**

**எனவே, நமது போராட்ட நோக்கம் சரியானதாக இருந்தாலும், உணர்ச்சி வயப்பட்டு இதுபோன்ற செயல்களை யாரும் செய்யக் கூடாது என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.**

**சகோதரர் சிவா திலீபன் அவர்கள் நலம் பெற்றுத் திரும்ப அனைத்துச் சிறப்பு கவனிப்புகளையும் செய்ய மருத்துவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட் டுள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



'நானும் தேர்தல் பணியாற்றுகிறேன்'
என்று கூறிக் கொண்டிருப்பவர்கள்,
'மேய்கிற மாட்டை, நக்குகிற மாடு' என்பார்களே,
அதற்குச் சமமானவர்கள்!
இது போன்றவர்கள் ஒதுங்கி நின்று
பலன் கருதாது
பாடுபடும் தொண்டர்களின் பணிக்கு
இடையூறு செய்யாதிருப்பதே நலம்!
"கதிர்மணி மட்டும் வேண்டும்
கழகப்பணி எவனோ பார்க்கட்டும் எனக்
கவலையற்று இருப்போருக்குக்
கழகமொன்றும் சத்திரம் சாவடியல்ல ;
இஃதொரு சரித்திரப் புத்தகம்"

தலைவர் கலைஞர்



கழக மாநில மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் மாணவர் அணி செயலாளர் திருமதி வீரமணி தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் தமிழரசன், திருமதி பூர்ணசங்கீதா, கோகுல், ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு : வேலூர் வடக்கு மாவட்டத்தில்

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கதிர் ஆனந்த் எம்.பி. வேண்டுகோள்!

வேலூர், மார்ச். 15–

வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்;பட்ட ஒன்றிய கழக, பேரூர் கழக சார்பில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை யொட்டி ஒன்றிய பா.ஜ.க அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க வையும் கண்டித்து இன்று (15.3.2026) காலை 10.30 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள், அந்நிர்வாகங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும்.

நமது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**வ.எ கழக நிர்வாகம் தலைமை இடம்**

1. காட்பாடி வடக்கு ஒன்றியம் – சி.இரவி – பொன்னை பேருந்து நிலையம்
2. காட்பாடி தெற்கு ஒன்றியம்– கா. கருணாகரன் – கோட்டநத்தம்
3. காட்பாடி கிழக்கு ஒன்றியம்– எஸ். சரவணன் – சேனூர் மந்தைவெளி
4. காட்பாடி மேற்கு ஒன்றியம் – எஸ். தணிகாசலம் – சுகர்மில், ஆரிமுத்துமோட்டூர்
5. வாலாஜா மேற்கு ஒன்றியம்– ஏ. கே.முருகன் – இலாலாப்பேட்டை
6. கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றியம் – ஆர்.முருகேசன் – இலத்தேரி பேருந்து நிலையம்
7. கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் – லோ.இரவிசந்திரன் – கே.வி. குப்பம் பேருந்து நிலையம்.
8. கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் – கே.சீதாராமன் – சென்ட்ரல் பேங்க் அருகில், கீழ் ஆலத்தூர்.
9. குடியாத்தம் வடக்கு ஒன்றியம் – என்.சத்தியானந்தம் – பரதராமி பேருந்து நிலையம்
10. குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் – வி.பிரதீஷ் – மேல் ஆலத்தூர்
11. குடியாத்தம் தெற்கு ஒன்றியம் – அ.அன்பரசுகாக்கா தோப்பு பேருந்து நிறுத்தம், – மேல் முட்டுக்கூர்
12. திருவலம் பேரூர் – கே.நேரு – திருவலம் பேருந்து நிலையம்.

இவ்வாறு மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.